**<u>அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தின் உயர் “மாருதி” விருது – 2015</u>**

பெறுபவர்: திருமிகு . கந்தசாமி நல்லசிவம்



| |
|---|
| தாய்த்தமிழின் புகழ் நிலைக்க தலைநகராம் 'பேர்த்' அதனில்<br>வாய்த்த பெரும் தமிழ்த் தொண்டர் வற்றாத அன்பதனால்<br>மாய்ந்து பெரும் தமிழ்ப்பள்ளி மனம் வைத்து உருவாக்கி<br>தீந்தமிழின் எழுச்சியினை திகட்டாது நிறுவியவர் |

இலங்கை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியுமான கந்தசாமி நல்லசிவம், பேராசிரியர் கைலாசபதி மற்றும் பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரின் சமகாலத்து மாணவனாகப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்சங்க நடவடிக்கைகளிலும் முன்னின்று ஈடுபாடு காட்டினார். நல்லசிவம் அவர்கள் கொழும்பில் பணி புரிந்து கொண்டிருக்கும் காலத்தில், 1983 ஆடிக் கலவரங்களில் அனைத்தையும் இழந்து சில காலம் சென்றதும் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவிற்குக் குடிபெயர்ந்தார்.

வட மாநிலத்தின் டார்வின் நகரில் தனது வாழ்வை மீள்பதிவு செய்யும் முயற்சியில் கடுமையாக உழைக்கும் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து அயராது தமிழுக்கும், சமயத்திற்கும் அரும் பணியாற்றி வருகின்றார். திரு நல்லசிவம் அவர்கள் டார்வினில் வசித்த காலத்தில்

அங்கு இயங்கிய பல்லின ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (MBC / NT) தமிழ் நிகழ்ச்சிகளை வழங்கியதுடன் "சிம்மக்குரலோன்" என்றும் அன்பாக டார்வின் வாழ் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டார்.

2006ம் ஆண்டு இவ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது 25ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய வேளையில் இவரது பங்களிப்பைப் பாராட்டி 'சேவை கௌரவிப்பு' விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது. வட மாநிலத் தமிழ் சங்கத்தின் உறுப்பினராக இருந்ததுடன் அதன் உப தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். மேலும் டார்வின் பிள்ளையார் ஆலயத்தின் ஆரம்பகாலம் முதல் இடுபாட்டுடன் பங்களித்ததுடன், முதன் முதலில் தமிழில் பூஜைகள் செய்யும் வழக்கத்தையும் அறிமுகப்படுத்தினார்.

1993ம் ஆண்டு அவுஸ்திரேலியாவிற்கு குடி பெயர்ந்த நல்லசிவம் அவர்கள் அங்கு தமிழ் மக்கள் மிகவும் சிறிய எண்ணிக்கையில் வாழும் பேர்த் நகரின் வட பகுதியினைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்டார். மேற்கு அவுஸ்திரேலியாவின் பூகோள அமைப்பு, சகல வளங்களும் பொருந்திய மத்தய அரசுகளின் சேவை வழங்கல்களுக்கே சவாலாக அமைந்திருப்பதை அவுஸ்திரேலியாவின் ஏனைய மாநிலங்களில் (குறிப்பாக சிட்னி, மெல்பேர்ண், கன்பரா) வாழும் மக்கள் புரிந்து கொள்வது கடினம். இந்நிலையில் குறிப்பிடத்தக்க மூல வளங்களோ, உறுதியான வலையமைப்போ இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் சிறு இனக்குழுமங்களுக்குத் தமது கலை, பண்பாடு, சமயம் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதும், நிகழ்வுகளை ஏற்ப்பாடு செய்து நடாத்துவது என்பதும் ஒரு கடினமான காரியமே.

அதிலும் பேர்த் நகரின் வட பகுதியை எடுத்துக்கொண்டால் அங்கு தென்இந்தியத் தமிழ் கோவில்களோ, தமிழ் பள்ளிகளோ, அளணி வல்லமையுடன் கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ் அமைப்புக்களோ இல்லை. ஏலவே சிட்னி, மெல்பேர்ண் நகர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகத் தமிழ் மக்கள் வாழும் பேர்த் நகரில், தென் பகுதியிலேயே தமிழ்க் குடும்பங்கள் செறிவாக வாழ்கின்றனர். இதற்குக் காரணம் இரு இந்துகோவில்களும் ஒழுங்கமைப்பட்ட வலையமைப்பும் தெற்குப் பகுதியில் காணப்படுவதேயாகும்.வடக்கிலுள்ள தமிழ் மக்கள்

மிக அண்மையில் உள்ள ஆலயம் செல்வதாயின் ஏறத்தாழ 50 கிலோ மீட்டர்கள் பயணஞ் செய்ய வேண்டும்.

இந்த நிலையில் திரு நல்லசிவம் அவர்கள் பேர்த் வடக்கில் வாழும் தமிழ்க் குடும்பங்களிற்கு ஒரு வலையமைப்பை ஏற்படுத்தி அவர்களின் பிள்ளைகள் தமிழ் மொழியைப் பயில்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். 1995ம் ஆண்டில் வடக்கு தமிழ் பள்ளியை ஸ்தாபித்ததுடன் அதன் அதிபராகவும், ஆசிரியராகவும் இருந்து பணியாற்றினார். தமிழ் மாணவர்களை கலை நிகழ்ச்சிகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றுவதற்காக தயார் படுத்தி தெற்குத் தமிழ் பள்ளியுடன் இணைந்து அவர்களையும் மொழி வளர்ச்சியில் ஊக்கத்துடன் ஈடுபடச் செய்தார். மிக அண்மையில் தமிழ்ப் பள்ளியின் பாடவிதானத்திற்கு மேலதிகமாக வாரமொரு திருக்குறளைக் கற்பித்து மாணவர்களுக்கு தமிழ் மறையாம் திருக்குறளை மனதில் இருத்தக் காரணமாய் இருக்கின்றார்.

இவ்வாறு தமிழ்ப் பணியை தமிழ்ப் பள்ளியூடாக மேற்கொண்டதுடன் நில்லாது, ஆன்மீகத்தினூடாகவும் தமிழைப் பரப்ப வேண்டும் என்பதில் என்பதில் உறுதியாக நின்றவர் திரு.நல்லசிவம்.ஆரம்ப காலத்தில் வேதாந்த சங்கத்துடன் இணைந்து சைவ சமய மக்களுக்கான பூசைகளை ஏற்பாடு செய்த நல்லசிவம் அவர்கள் 2002ம் ஆண்டு முதல் பத்து வருடங்கள் தமது சொந்த செலவில் மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமைகளில் சனசமூக நிலைய மண்டபம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அங்கு தமிழில் தேவார புராணங்களை ஓதி சிறுவர்களும், பெரியோர்களுமாக ஆன்மீகதினூடாக தமிழை வளர்க்கத் துணை நின்றார். அவரது ஆலோசனைப்படி இந் நிகழ்வினைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக சுவான் இந்து தமிழ் சங்கம் என்னும் அமைப்பை நிறுவி, இன்று இப் பூசைகளை ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு குடும்பத்தினர் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றார்கள். இப்பூசை நிகழ்வுகளின் ஓர் அங்கமாக சிறுவர்களுக்கான இராமாயணக் கதையை தொடர்ந்து போதித்து வந்ததுடன் பங்கு பற்றும் சகல சிறுவர்களும் இன்று கணிசமானவளவு தேவாரங்களை மனனம் செய்திருப்பதுடன் மட்டுமன்றி, ஒவ்வொரு மாதப் பூசைகளிலும் அவற்றைப் பண்ணுடன் ஓதிப்பயனடைகின்றனர்.

இன்று புதிதாகக் குடிவரும் தமிழ்க் குடும்பங்கள் பேர்த்தின் வட பகுதியில் தயக்கமின்றித் தம்மை நிலைப்படுத்திக்கொள்ள முன்வருவதற்கு வளர்ந்து வரும் தமிழ் பள்ளியும், சமயக் கூட்டுப் பிரார்த்தனைகளும், இறுக்கமாகி வரும் தமிழ் சமூக வலை அமைப்பும் ஒரு காரணம் என்றால் மிகையாகாது.

மேலும்  இந்நிகழ்வுகளின்  மூலம் இலங்கை, இந்திய, மலேசிய, சிங்கபூர் மற்றும் மொரீசியஸ் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பரஸ்பர நட்புறவையும், நல்லிணக்கத்தையும்  வளர்த்துக் கொள்வதில் திரு.நல்லசிவம் அவர்களின் பங்கு முக்கியமானது.சிறிய எண்ணிக்கையான தமிழ்க் குடும்பங்களுடன் கடும் முயற்சியினால் கட்டியெழுப்பிய வலையமைப்பின் பயனாக இன்று மாதாந்தக் கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு தெற்கிலிருந்தும் குடும்பங்கள் நீண்ட தூரம் பயணித்து வருகை தருவது குறிப்பிடப்பட்ட வெற்றியாகும்.

இந்தநிலையில் மிகவும் கடினமான ஒரு காலப்பகுதியில் தனி மரமாக நின்று பிற்கால சமூகத்தின் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்து அமைதியாகவும்,ஆரவாரமின்றியும் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் திரு நல்லசிவம் அவர்களின் எண்பதாவது அகவையில் அவர்தம் பங்களிப்பை கௌரவிப்பதற்காகவும், சவால்களின் மத்தியில் அவர் ஆற்றிய பணிகளிற்கு நன்றி கூறும் முகமாகவும் கம்பன் கழகத்தினரின் விருதுக்கு சிபாரிசு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வேற்றமிகு பெரியவருக்கு, *அவுஸ்திரேலியக் கம்பன் கழகம், லக்ஷ்மி பிருதிவிராஜ் நிறுவியுள்ள அமரர் கம்பகலாநிதி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் ஞாபகார்த்த அறக்கட்டளை - உயர்விருதான ‘மாருதி’ விருதினை 2015ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் வழங்கிப் பெருமையடைந்தது*